# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040874

1. District மாவட்டம் : Tiruppur | PS: காவல்நிலையம் VS&AC | Year: ஆண்டு 2024 | FIR No.: முத அ. எண் 2/2024/AC/TPR | Date: நாள் 12.03.2024

2. (i) Act சட்டம்: The PC Act 1988 as — Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: amended by PC (Amendment) — Sections பிரிவுகள்: 7 r/w 12
(iii) Act சட்டம்: Act, 2018 — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 28.02.2024 — Date to : நாள் வரை 11.03.2024
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 10.30 hrs — Time to : நேரம் வரை 12.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.03.2024 — Time : நேரம் 08.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 12.03.2024 — Time : நேரம் 08.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — At about 5 km South East
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி Tiruppur South Revenue Inspector Office, Tiruppur.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் : —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் G. Ashok Kumar — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Gopalan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 33/2024 — (d) Nationality : நாட்டினம் Indian — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Tailor — (g) Address : முகவரி Door No. 1/151, Rajiv Nagar First Street, Palavanchipalayam, Tiruppur South Taluk, Tiruppur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. Nagarajan, Revenue Inspector, Tiruppur ~~North~~ South, Tiruppur and the
2) Tr. Suresh

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any.
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS...........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 12-03-2024 [signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 12.03.2024.

Name: பெயர் K. Sasilekha
Rank: நிலை Inspector of Police, No. எண் VSAC, Tiruppur
12.03.2024

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்றஎண். 02/2024/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகியநான் 12.03.2024-ம் தேதி காலை 08.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திரு.G.அசோக்குமார், த/பெ.கோபாலன், கதவு எண் 1/1151, ராஜீவ் நகர், முதல் வீதி, பழவஞ்சிபாளையம், திருப்பூர் தெற்கு தாலூகா, திருப்பூர் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்தபுகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் G.அசோக்குமார், த/பெ.கோபாலன், கதவு எண் 1/1151, ராஜீவ் நகர் முதல் வீதி, பழவஞ்சிபாளையம், திருப்பூர் தெற்கு தாலூகா, திருப்பூர். செல் நம்பர் 9629696761. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, திருப்பூர். நான் திருப்பூர், திருப்பூர் தெற்கு தாலுகா, பழவஞ்சிபாளையம், ராஜீவ்நகர் முதல்வீதியில் எனது அம்மா, அப்பா, மனைவி மற்றும் மகனுடன் வசித்து வருகிறேன். நான் கார்மெண்ட் கம்பெனிகளுக்கு டெய்லர் வேலைக்கும் மற்றும் கம்பெனிகளிலிருந்து வேஸ்டாக வரும் துணிகளை எடுத்து வியாபாரமும் செய்து வருகிறேன். எனது அக்கா மகேஸ்வரிக்கு திருமணமாகிவிட்டது. திருப்பூர் தாலுகா, வீரபாண்டி கிராமம் பிளாக் நம்பர் 475/1-ல் 1 ¼ சென்ட் நிலம் நிலத்துண்டின் நம்பர் 51 - ன்படி ந.க.16134/91/அ6 நாள்14.12.1992 - ல் எனது அம்மா பாப்பாத்தி க/பெ.கோபால் பெயரில் இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டது. மேற்படி இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறோம். எனது அம்மா மேற்படி இடத்தை எனது பெயரில் தான செட்டில்மெண்டாக எழுதி தருவதாக சொன்னார். அதற்காக நான் பத்திரம் தயார் செய்வதற்காக நல்லூர் பத்திர அலுவலகம் அருகில் உள்ள பத்திர எழுத்தர் அலுவலகத்தில் விசாரித்த போது இலவச வீட்டுமனை பட்டாவாக இருந்தால் தாலுகா அலுவலகத்தில் NOC வாங்கி வந்தால் தான் பத்திரம் பதிவு செய்வார்கள் என்று சொன்னார். அதனால் நான் திருப்பூர் தெற்கு தாலுகா அலுவலகம் முன்பு

மனுக்கள் எழுதி கொடுக்கும் இடத்திற்கு சென்று அங்கிருந்த ஒரு பெண்மணிடம் விபரங்களை சொன்ன போது அவர் மனு எழுதி என்னிடம் கொடுத்து எனது அம்மாவிடம் கையொப்பம் பெற்று வந்து தர சொன்னார். அதன்படி நான் வீட்டிற்கு சென்று அம்மாவிடம் கையொப்பம் வாங்கி வந்து மனு எழுதி கொடுத்த பெண்மணிடம் மனுவை கொடுத்தேன். அவர் அந்த மனுவில் தாலுகா அலுவலகத்தில் சீல் வைத்து என்னிடம் கொடுத்து VAO விடம் கொடுக்க சொன்னார். நான் அந்த மனுவுடன் இலவச வீட்டுமனைபட்டா, எனது அம்மாவின் ஆதார் கார்டு, ரேசன் கார்டு, வீட்டுவரி மற்றும் குடிநீர் வரி ரசீது, ஈபி ரசீது மற்றும் வாக்காளர் அடையாள அட்டையில் அம்மாவின் பெயர் மாறுதல் செய்வதற்காக விண்ணப்பித்த விண்ணப்பம் ஆகியவற்றை இணைத்து வீரபாண்டி VAO அலுவலகம் சென்று VAO திருமதி.பரிமளாதேவி அவர்களிடம் 19.2.2024 தேதி 12.00 மணியளவில் கொடுத்தேன். அவர் விண்ணப்பத்தை வாங்கி பார்த்து என்னிடம் விபரங்களை கேட்டுவிட்டு இடத்தை வந்து பார்ப்பதாக கூறினார். 23.2.2024 தேதி காலை சுமார் 11.30 மணியளவில் எனது செல்போனுக்கு 8508600499 என்ற எண்ணிலிருந்து பேசிய நபர் தான் வீரபாண்டி VAO அலுவலகத்திலிருந்து பேசுவதாகவும், VAO மேடம் உங்கள் இடத்தை பார்க்க வந்து கொண்டிருப்பதாகவும் வீட்டில் இருக்குமாறு கூறினார். அதற்கு நான் சரி என்று சொன்னேன். சுமார் 12.00 மணியளவில் VAO மேடத்துடன் ஒரு நபரும் வந்தார். என்னிடமும், எனது அம்மாவிடமும் விசாரித்துவிட்டு இடத்தை பார்த்துவிட்டு என்னை அலுவலகம் வந்து பார்க்க சொன்னார். நான் 3.00 மணியளவில் VAO அலுவலகம் சென்று VAO பரிமளாதேவி அவர்களை பார்த்த போது NOC சம்பந்தமாக கேட்ட போது அவர் என்னிடம் உங்களுக்கு திருமணமாகிவிட்டதா, அப்பா இருக்கிறார்களா என்று கேட்டார். நான் ஆமாம் என்று சொன்னேன். என்னிடமிருந்த ஆவணங்களை பார்த்துவிட்டு அலுவலகத்திற்கு வெளியே அமர சொன்னார். சிறிது நேரம் கழித்து என்னை அழைத்து NOC ஈசியான வேலை கிடையாது என்று கூறிவிட்டு நான் கொடுத்த விண்ணப்பத்துடன் அவர் எழுதிய ரிப்போர்ட்டையும் சேர்த்து என்னிடம் கொடுத்து திருப்பூர் தெற்கு ஆர்.ஐ அலுவலகத்திற்கு சென்று ஆர்.ஐ யிடம் கொடுக்குமாறு சொன்னார். அதன்படி நான் 24.2.2024 தேதி காலை சுமார் 10.30 மணியளவில்

அரிசி கடை வீதியில் உள்ள திருப்பூர் தெற்கு ஆர்.ஐ அலுவலகத்திற்கு சென்று பார்த்த போது அலுவலகம் பூட்டியிருந்தது. அதன்பின்னர் நான் 26.2.2024 தேதி காலை சுமார் 10.30 மணியளவில் ஆர்.ஐ அலுவலகத்திற்கு சென்று ஆர்.ஐ திரு.நாகராஜன் அவர்களிடம் விருபாண்டி VAO கொடுத்தனுப்பிய விபரத்தை கூறி விண்ணப்பத்தை கொடுத்தேன். அவர் தான் ஸ்டிரைக்கில் இருப்பதாகவும் 2 நாள் கழித்து வந்து பார்க்குமாறு சொன்னார். நான் 28.2.2024 தேதி காலை சுமார் 10.30 மணியளவில் ஆர்.ஐ அலுவலகத்திற்கு சென்று பார்த்து நத்தம்பட்டா NOC சம்பந்தமாக கேட்ட போது நீங்கள் தாசில்தாரை பார்த்தீர்களா என்று கேட்டார். நான் இல்லை என்று சொன்னேன். விண்ணப்பத்தில் சீல் உள்ளது என்று சொன்னார். அதற்கு நான் விண்ணப்பம் எழுதி கொடுத்தவர் தான் தாலுகா அலுவலகத்திற்கு சென்று சீல் வைத்து கொடுத்தார் என்று கூறினேன். விண்ணப்பத்தில் வில்லேஜ் ரெக்கார்டு எதுவுமே இல்லை என்று சொன்னார். நான் விண்ணப்பத்தில் முதலில் VAO ரிப்போர்ட் உள்ளது என்று சொன்னவுடன் அதனை பார்த்துவிட்டு நோட் மாதிரி இருக்கும் அதை ஜெராக்ஸ் எடுத்து VAO கையொப்பம் செய்து தருவார் நான் VAO விடம் பேசி கொள்கிறேன் என்று சொன்னார். இலவச வீட்டுமனை பட்டா NOC தாசில்தாருக்கு பரிந்துரை செய்ய பணம் ரூ.10,000/- தனக்கு தனியாக தர வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் கம்பெனிகளுக்கு லேபராக தான் வேலைக்கு செல்கிறேன் முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் நார்மலாக NOC க்கு ரூ.10,000/- வாங்குவேன் என்று சொல்லிவிட்டு என்னை வெளியே இருக்க சொன்னார். அந்த அலுவலகத்தில் இருந்த சுரேஷ் என்பவரை அழைத்து பேசினார். அதன்பின்னர் சுரேஷ் என்னை அழைத்து சார் சொன்ன தொகையிலிருந்து பணம் ரூ.2,000/- குறைத்து பணம் ரூ.8,000/- கொடுங்கள் என்று சொன்னார். அதன்பின்னர் நான் ஆர்.ஐ அவர்களை பார்த்த போது பணம் ரூ.8,000/- கொடுத்துவிடுங்கள் ஸ்டிரைக்கில் இருப்பதால் பழைய தேதியில் NOC ரிப்போர்ட்டை தாசில்தாருக்கு பரிந்துரை செய்கிறேன் என்று சொன்னார். நான் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். 11.3.2024 தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் ஆர்.ஐ அலுவலகத்திற்கு சென்று ஆர்.ஐ திரு.நாகராஜன் அவர்களை பார்த்து நத்தம்பட்டா NOC சம்பந்தமாக கேட்டேன். அப்போது அவர் நீங்கள் எப்போது

விண்ணப்பம் கொடுத்தீர்கள் என்று கேட்டார். அதற்கு நான் 2 வாரத்திற்கு முன்பு நீங்கள் ஸ்ரைக்கில் இருக்கும் போது பார்த்து கொடுத்தேன் என்று சொன்னேன். இலவச வீட்டுமனை பட்டாவா என்று கேட்டு விட்டு NOC க்கு டைப் செய்ய கொடுத்துள்ளேன். டைப் ஆகிவிட்டதா என்று செக் செய்கிறேன். 10 நிமிடம் வெயிட் பண்ணுங்கள் என்று கூறினார். பின்பு ஆர்.ஐ சுரேஷ் என்பவரை அழைத்து பேசினார். அதன்பின்னர் சுரேஷ் என்னிடம் பணம் ரூ.8,000/- கொடுத்து விடுங்கள். நீங்கள் பணத்தை கொண்டு வந்தால் NOC உடனடியாக கிடைத்துவிடும் என்று சொன்னார். நான் உடனே ஆர்.ஐ யை பார்த்து கேட்கட்டுமா என்று கேட்டேன். அதற்கு சுரேஷ் சாரை கேட்டாலும் அதே தொகையை தான் சொல்லுவார் என்று சொன்னார். நான் ஆர்.ஐ அவர்களை பார்த்து கான்டோலன்ஸ்க்கு சென்றதால் பணம் செலவாகிவிட்டது என்று சொன்னேன். அதற்கு அவர் ஏற்கெனவே சொல்லிவிட்டேனே நான் கேட்ட தொகை ரூ.8000/- மே கம்மிதான். NOC டைப் செய்ய கொடுத்துள்ளேன். நீங்கள் எவ்வளவு சீக்கிரமாக பணத்தை கொடுக்கிறீர்களோ உங்களுக்கு NOC உடனே கிடைத்துவிடும். நாளைக்கே தான் கேட்ட பணத்தை கொடுத்துவிட்டு NOC வாங்கி கொள் என்று கண்டிப்பாக கூறினார். எனக்கு எனது அம்மா பெயரில் இருக்கும் இலவச வீட்டுமனை பட்டாவுக்கு NOC க்கு தாசில்தாருக்கு பரிந்துரை செய்ய திருப்பூர் தெற்கு ஆர்.ஐ திரு.நாகராஜன் அவர்கள் அவருக்காகவும், அவரது அலுவலகத்தில் இருக்கும் சுரேஷ் என்பவர் ஆர்.ஐ திரு.நாகராஜன் அவர்களுக்காக லஞ்சமாக கேட்கும் பணம் ரூ.8,000/-த்தை கொடுக்க விருப்பமில்லை. எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். Sd/-xxxx G.Ashokkumar, 12-03-2024. Sir, Received the complaint on 12.03.2024 at 08.00 hrs and made preliminary verification between 08.00 hrs to 08.30 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.2/2024/AC/TPR u/s 7, 7 r/w 12 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 on 12.03.2024 between 08.30 hrs to 09.30 hrs. Sd/-xxxx (K.Sasilekha). 12/03/2024 Inspr. V&AC, TPR.

Original FIR along with original written complaint of G.Ashokkumar, S/o Gobalan, Door.No.1/1151, Rajeev nagar, First Street, Pazhavanjipalayam, Tiruppur South Taluk, Tiruppur is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 12.02.2024.